Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 254

வெள்ளிக்கிழமை
08 ஓகஸ்ட் 2025

ஆடி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## வடக்கில் வெப்பம் உக்கிரம்

விரிவு
பக்கம்:- 02

### யாழ். பல்கலைக்கழகத்தில்

## தலைவிரித்தாடுகின்றது 'ராகிங்' கட்டுப்படுத்த களத்தில் பொலிஸ்

### பல்கலை மானியங்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு ஏற்ப உடன் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 8

யாழ். பல்கலைக்கழகத்துக்கு வெளியேயுள்ள மாணவர் விடுதிகள் மற்றும் தங்குமிடங்களில் உள்ள மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு யாழ்ப்பாணப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.பி.எஸ்.ஜயமஹாவிடம், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

11

## கொழும்பில் தாக்குதல் நடத்த வவுனியாவில் கைக்குண்டுகள்

### ஜனாதிபதி அநுரகுமார தகவல்



கொழும்பு, ஓக. 8

வவுனியாவில் மீட்கப்பட்ட கைக்குண்டுகள் கொழும்புக்கே கொண்டுவரப்படவிருந்தன. அதன்மூலம் என்ன செய்ய எதிர்பார்த்தனர்? பாதாளக் குழுக்கள் மூலமும் சூழ்ச்சிசெய்ய முற்படுகின்றனர். புதிய சட்டங்கள் இயற்றியாவது சூழ்ச்சிகள்

11



## தமிழர்களுக்குத் தேவை சமஷ்டி முறைத் தீர்வே!

### மன்னாரில் போராட்டம்

மன்னார், ஓக. 8

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தில், சமஷ்டி முறையில் தமிழர்களுக்கு அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்று வலியுறுத்தி மன்னாரில் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.

11

## குளிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 8

தொண்டைமானாறு கடற்கரைப் பகுதியில் குளிக்கச் சென்ற

11

### முன்னாள் ஜனாதிபதிகளின்

## சிறப்புரிமைகள் ரத்து; சட்டமூலம் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஓக. 8

ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகள் மற்றும் சலுகைகளை இரத்துச் செய்வதற்குரிய சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவால் இந்தச் சட்டவரைவு சபையில்

09

## விபத்தில் முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 8

யாழ்ப்பாணம் - அராலியில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற விபத்

11

### வவுனியாவில்

## யானை தாக்கி குடும்பஸ்தர் பலி!

வவுனியா, ஓக. 8

வவுனியாவில் யானைத் தாக்குதலுக்கு உள்ளாகி குடும்பத் தலைவர் ஒருவர் நேற்று முன்தினம்

11

### தரம் 5

## புலமைப்பரிசில் பரீட்சைக்கு சகல ஏற்பாடுகளும் நிறைவு

கொழும்பு, ஓக. 8

ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

புலமைப் பரிசில் பரீட்சைக்

11



## அமெரிக்க வரி விதிப்பு; பேச்சுத் தொடர்கின்றது!

கொழும்பு, ஓக. 8

தீர்வை வரி விவகாரம் தொடர்பில் அமெரிக்காவுடன் பேச்சுகள் தொடர்கின்றன. இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டு, ஒப்பந்தம் எதுவும் கைச்சாத்திடப்படவில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்காவால் விதிக்கப்பட்ட தீர்வை வரியை நாட்

11

### முச்சந்தி முரளி

'இனப்பிரச்சினை தீர்ந்தாலும் உந்த ராக்கிங் பிரச்சினையை தீர்க்கமுடியுமோ தெரியேலை'

## திஸ்ஸ விகாரைக்கு எதிராக தையிட்டியில் மீண்டும் போர்

### இன்றும் தொடரும்

யாழ்ப்பாணம், ஓக. 8

யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்று மீண்டும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டம் இரண்டாவது நாளாக இன்றும் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தையிட்டியில் பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ

11

### காணாமல் ஆக்கப்பட்டோருக்காக

## வடக்கிலும், கிழக்கிலும் மிகப்பெரும் போராட்டம்!

யழ்ப்பாணம், ஓக. 8

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் மிகப்பெரும் போராட்டத்தையும், பேரணிகளையும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் செயலாளரும், வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவியுமான சிவானந்தன் ஜெனிற்றா யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தெரிவித்ததாவது:-

வடக்கு கிழக்குத் தமிழர் தாயகப் பகுதியில், வலிந்து

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 07.08.2025 | திகதி 07.08.2025 | திகதி 07.08.2025 | திகதி 07.08.2025 | திகதி 07.08.2025 | திகதி 07.08.2025 | திகதி 07.08.2025 | திகதி 07.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4156 | சீட்டிழுப்பு இலக்கம் 1223 | சீட்டிழுப்பு இலக்கம் 0182 | சீட்டிழுப்பு இலக்கம் 2262 | சீட்டிழுப்பு இலக்கம் 5914 | சீட்டிழுப்பு இலக்கம் 1944 | சீட்டிழுப்பு இலக்கம் 0489 | சீட்டிழுப்பு இலக்கம் 0030 |
| ஆங்கில எழுத்து K | வெற்றி இலக்கினம் கன்னி | ஆங்கில எழுத்து Y | ஆங்கில எழுத்து Q | ஆங்கில எழுத்து G | ஆங்கில எழுத்து W | ஆங்கில எழுத்து G | வெற்றி இலக்கினம் சிம்மம் |
| | | | சுப்பர் இலக்கம் 12 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 10 36 53 79 | வெற்றி இலக்கங்கள் 14 25 56 58 | வெற்றி இலக்கங்கள் 5 4 6 0 | வெற்றி இலக்கங்கள் 28 29 41 62 | வெற்றி இலக்கங்கள் 4 8 4 8 4 7 | வெற்றி இலக்கங்கள் 06 13 41 66 | வெற்றி இலக்கங்கள் 4 8 4 7 | வெற்றி இலக்கங்கள் 05 11 19 34 |
| விசேட எழுத்து K | | | | | விசேட எழுத்து W | | |

# அமெ. புதிய வரிவிதிப்பு நேற்றுமுதல் நடைமுறை



கொழும்பு, ஓக.8

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரிக்கொள்கையின்கீழ் இலங்கை மீது விதிக்கப்பட்ட புதிய வரிகள் நேற்றுமுதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

அமெரிக்காவுக்கு ஏற்றுமதிசெய்யும் நாடுகள்மீது அமெரிக்கா புதிய வரிகளை அறிமுகப்படுத்தியது. இலங்கைமீது 44 சதவீத வரி விதிக்கப்பட்டிருந்த நிலையில், இரு நாடுகளுக்கும் இடையே நடந்த பேச்சுகளின் முடிவில் அது 20 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

இந்தப் புதிய வரிக்கொள்கை இந்த மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், அமெரிக்க ஜனாதிபதியால் நேற்றுவரை அது ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, அமெரிக்கா விதித்த வரிவீதத்தை மேலும் குறைக்க பேச்சு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று இலங்கை ஏற்றுமதி மேம்பாட்டுசபையின் தலைவர் மங்கள விஜேசிங்க தெரிவித்துள்ளார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 07.08.2025 | தினம் வியாழக்கிழமை | வெற்றி வாரம் 0622 |
| DLB | ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கம் 2 7 1 7 6 3 |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி 07.08.2025 | தினம் வியாழக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2888 | ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கம் 30 37 47 58 |


| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி 07.08.2025 | தினம் வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து A | வெற்றி இலக்கம் 13 22 44 56 | வெற்றி வாரம் 5049 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி 07.08.2025 | தினம் வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் 0742 | வெற்றி இலக்கம் 18 21 43 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி 07.08.2025 | தினம் வியாழக்கிழமை | |
| மிதுனம் | வெற்றி இலக்கம் 09 19 20 91 | சீட்டிழுப்பு வாரம் 4600 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி 07.08.2025 | தினம் வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து X | சுப்பர் இலக்கம் 30 | வெற்றி இலக்கம் 37 42 53 73 | வெற்றி வாரம் 2064 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி 07.08.2025 | தினம் வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கம் 01 11 29 49 | வெற்றி வாரம் 2714 |




# நாமல் வழக்கு ஜனவரிக்கு

கொழும்பு, ஓக.8

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மற்றும் அவர் உள்ளிட்ட பிரதி வாதிகள் குழுவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் ஜனவரி 29ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாமல் ராஜபக்ச முன்னதாக சட்டவிரோதமாக சம்பாதித்த 15 மில்லியன் பணத்தை என்.ஆர். கன்சல்டன்சி என்ற நிறுவனத்தில் முதலீடு செய்தமை தொடர்பாக இந்த வழக்குத் தொடரப்பட்டது. (ச)



# வெப்பம் உக்கிரம்

கொழும்பு, ஓக.8

நாட்டில் சில பகுதிகளில், மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை - அதாவது 'வெப்பக் குறியீடு 'எச்சரிக்கை' நிலையில் இருப்பதாகவும், இது உடல் நலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கலாம் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி வடமத்திய, கிழக்கு மாகாணங்கள் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மொனராகலை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கே இந்த எச்சரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பாதுகாப்பாக இருக்க, அதிகநேரம் வெளியில் செல்லாமல், நீர் உட்கொள்ளும் பழக்கத்தை அதிகரிக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# சிறப்புரிமையை நீக்கினால் உயிர்களுக்கு அச்சுறுத்தலாம்

## ஐ.தே.க. அமைப்பாளர் பதைபதைப்பு

கொழும்பு, ஓக.8

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகள் நீக்கப்படுவதால் அவர்களுக்கு உயிராபத்து ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மஹரகம தொகுதி அமைப்பாளர் நிஷாந்த சிறி வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வீடுகள், ஓய்வூதியம், பாதுகாப்பு போன்ற சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உள்ளோம். இந்தச் சலுகைகளை நீக்குவதால் அவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும்.

30 வருடங்களாக போர்செய்த நாடு எம் நாடு. அரசியற்தலைவர்கள்மீது பலதடவைகள் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பாதுகாப்பு உள்ளிட்ட சலுகைகளை நீக்குவதால் அவர்களுக்கு உயிராபத்து ஏற்படலாம் - என்றார். (எ-75)

# அரசியல் வங்குரோத்தாலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணை

## பிரதியமைச்சர் சுனில் குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக.8

எதிர்க்கட்சிகளிடம் அரசியல் செய்வதற்கு எதுவும் இல்லாததாலேயே பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரவுள்ளனர் என்று பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில்தற்போதையபாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகர கிழக்கின் தளபதியாக இருந்தார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் இவருக்குத் தகவல் தெரியும் என்று கூறியே நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு எதிர்க்கட்சிகள் முடிவெடுத்துள்ளன.

இந்தவிவகாரம்தொடர்பில் அருண அண்மையில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்கினார். அவர் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார். இதில் மறைப்பதற்கு எதுவுமில்லை. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை இடம்பெறுகிறது. அதற்கு அமையவே அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நாம் முறையான விசாரணையை நடத்தி வருகிறோம். தாக்குதலின் சூத்திரதாரி சிக்கும்வரை விசாரணை தொடரும் - என்றார். (எ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய விசுவா வசு வருட மஹோற்சவப் பெருந் திருவிழாவின் ஒன்பதாம் நாள் மாலை உற்சவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை பக்தி பூர்வமாக நடைபெற்றது. இதன்போது நல்லூர்க் கந்தவேற்பெருமான் வெள்ளை யானை வாகனத்தில் வள்ளி தெய்வானையருடன் வீதி உலா வந்தார். (ச-66)

# தெய்வீகத் திருக்கூட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஒக.8

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் பதினோராம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வேதாந்த மடம், ஸ்ரீ சிவகுருநாத பீட 8ஆவது குருபீடாதிபதி வணக்கத்திற்குரிய ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் முன்னிலை வகிக்க, அராலி வண்ணபுரம் சிவன் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ எஸ். ஸ்ரீகோபாலகக்குருக்கள் தலைமையில் இத்திருக்கூட்ட நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாநகரசபை ஆணையாளர் ச.கிருஸ்னேந்திரன், சிறப்பதிதியாக இலங்கை நாடாளுமன்ற ஆராய்ச்சி உத்தியோகத்தர் விஸ்வலிங்கம் முரளிதாஸ், கௌரவ அதிதிகளாக செட்டித்தெரு மெடிஸ்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் கந்தசாமி சசிகரன், யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபைச் செயலாளர் சே.செல்வராஜன், துரவடிப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலைப் பொறுப்பாசிரியர் திருமதி. கமலாதேவி சபாரத்தினம், தலையாழி ஞான வைரவர் ஆலயச் செயலாளரும் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலய ஓய்வுநிலை அதிபருமான மகேசன் கஜேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கலைநிகழ்வுகளை நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவின் சைவ பரிபாலனசபை அறநெறிப்பாடசாலை மற்றும் தலையாழி ஞான வைரவர் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கவுள்ளனர். சிறப்பு நிகழ்வுகளாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வளவாளர் நாகராஜா சனாதனனின்(தமிழகரன்சனா), "வேலன் வருகை"என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவும், திருமதி சியாமலா பாலகிருஷ்ணனின் மாணவர்கள் வழங்கும் இசைக்கச்சேரி நிகழ்வும், செல்வன் விஜயகுமார் வத்சாங்கிதசர்மாவின் இசை அரங்கும், மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-41)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக.8

மயிலிட்டி தெற்கு கட்டுவன் துறட்டையிட்டி அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தான அலங்கார உற்சவம் எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 21ஆம் திகதி வியாழக்கிழமை வரை 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை கும்பாபிஷேக தினத்தில் 108 சங்காபிஷேகம் நடைபெற்று மாலை பூங்காவனம், திருவூஞ்சல் இடம்பெற்று சுவாமி உள்வீதி, வெளிவீதி உலா வருதல் இடம்பெறும். உற்சவ காலத்தில் தினமும் மதியம் அன்னதானம் வழங்கப்படும். (ச-25)

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மூன்றாவது ஆடிச் செவ்வாய் உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (25, 66)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஒக.8

மட்டுவில் மருதடி தான்தோன்றிப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம் கடந்த 31ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், நாளை சனிக்கிழமை காலை 10மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை 10மணிக்குத் திருக்கல்யாணத் திருவிழாவும், அன்றைய தினம் மாலை 7மணிக்கு பூங்காவனத்திருவிழாவும் ஆலயப் பிரதமகுரு சிவ ஸ்ரீ பொன்லக்சநாம தாசக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளன. (ச-41-131)



# தெய்வீகக்கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஒக.8

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் "தெய்வீகக்கலை அர்ச்சனை" நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை சுழிபுரம் யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை ஆசிரியர், மாணவர்களின் பஜனை நிகழ்வும், ஆன்மீகப்பிரசாரகர் ஈ.நவிஷாவின் 'கந்தபுராணத்திற்குரு' எனும் விடயப் பொருளில் ஆன்மிகவுரையும் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ச-41)

# 11ஆம் திருவிழா




## போதையற்ற நாடாக மாற்றிடப்பா

ஈழத்திருநாட்டின் வடபுலம்
நல்லூர்ப் பதிதனில்
வீற்றிருந்து அருள்புரியும்
நல்லூர்க் கந்தா
போதையெனும் கொடிய
அரக்கனின் கோரப்பசிக்குள்
சிக்குண்டிருக்கும்
இளம் பிஞ்சுகளை மீட்டு
அக் கொடிய அரக்கனை
வதம் செய்து
ஈழத்திருநாட்டை
போதையற்ற நாடாக
மாற்றிடப்பா

**ச.செல்வக்குணசந்திரன்**
பருத்தித்துறை

## மக்கள் துயர் துடைப்பாயா?

நல்லை எனும் பதியினிலே
நலம் பல புரியும் நல்லூரானே
ஆனைமுகன் தம்பியே ஆறுமுகனே
தேவர் துயர் துடைத்த தெய்வமே
நம் மக்கள் துயர் துடைப்பாயா?

துன்பம் என்ற இருளை நீக்கி
இன்பம் என்ற ஒளியைத் தருவாயா?
கருணைக்கடலே கந்தா
கலியுக வரதனே
கதிரமலையானே
என்றும் உன் பாதம் தொழுவேன்
எல்லோரும் நலமாக வாழ
நலம் புரிவாயா?
நல்லூரானே நல்லை நாதா.

**ஆர். தனபாலசிங்கம்**
முக்கரவத்தை
வல்வெட்டித்துறை

## பிரணவத்தின் பொருள்கேட்டவா!

நல்லையம்பதிவாழ் ஷண்முக சிவகுமரா
அடியவர் மனம்வாழ் அறுமுக அலங்கார வேலா
உன் கீழ்த்திசைச் செம்மணியைப் பார்த்திலையோ
எம்மேல்த்திசை அம்மணிகாலம் அறிந்திலையோ
பிரணவத்தின் பொருள்கேட்டுத் தண்டித்தவா
மனிதத்துவக் குற்றங்கண்டும் பொறுப்பதேனோ
மஞ்சத்தில் மெய்ப்பராய் வந்து அருள்பாலித்தாய்
பிரபஞ்சத்தின் மீட்பராய் வந்து எமைக்காத்திடுவாய்

**சிவ.கிரிதரன்**
ஓட்டுமடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி



வட்டுக்கோட்டை - துறட்டிப்பனை

# ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

## விசுவாசு வருஷம் (2025 ஆம் ஆண்டு)

# மகோற்சவ விஞ்ஞாபனம்
# இரதோற்சவ சிறப்பிதழ்

## (08.08.2025 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி)

### ஆலயச்சிறப்பு

குமரி மாநிலத்தில் பிரமதண்டம் முள்ளந்தண்டு போல் விளங்கும் மேருமலையின் குறியை காணலாம் என திருமூலர் கூறும் இலங்கை திருநாட்டில் மகுடம் என விளங்கும் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை எனும் திருப்பதியில் வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தில் நடுவான் சீதாளதேவி பொன்வண்ணப் பேரழகி முத்துமாரி அம்பாள் வேண்டும் வண்ணம் அருள் பாலிக்கின்றாள். அப்பெரும் தாய்க்கு 08.08.2025 வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் இலங்கை வரலாற்றில் முதன் முதலாக வடிவமைக்கப்பட்ட தசகோண பவள பத்திரக கலிங்கமரபு சித்திர தேர் காண திருவருள் கைகூடியுள்ளது.

### பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



இலங்காபுரியின் வடபுலத்தின் கிரமமாக விளங்கும் யாழ்ப்பாண தீபகற்பத்தின் வலி காமம் மேற்கு சங்கானை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வட்டுக்கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் பல்நெடும் காலமாக எழுந்தருளி அருள்பாலித்து வரும் வட்டுக் கோட்டை- துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மஹோற்சவ பெருவிழா கொண்டாடுவதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பிரதேச செயலாளர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இதில் தேர் திருவிழா என்பது முக்கியமானதொன்றாகும். இவ்வாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரதோற்சவம் நடைபெறுவதை இட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எனவே நீண்ட காலமாக முறையான நிர்வாக சபை அமைக்கப்பட்டாமல் இருந்து 2024ல் புதிய நிர்வாக சபை அமைக்கப்பட்டு சிறப்பான முறையில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் தற்போது உள்ள நிர்வாகத்தினர் புதிதாக தேர் ஒன்றை அமைத்தது சிறப்பான ஒரு விடயமாகும். இவ் ஆலயத்தின் வளர்ச்சியிலே பெரும் பங்காற்றி வரும் ஆலய பரிபாலன சபையினர் தமது அயராத உழைப்பின் மூலம் இன்று இவ்விழாவினை சிறப்புற ஒழுங்குபடுத்தியுள்ளனர். இன்நன்நாளில் அடியவர்களின் வாழ்வில் இன்னல்கள் நீங்கி அறநெறி மிக்க சமுதாயத்தை உருவாக்குவதற்கான ஆற்றலை அருளும் வகையில் எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆசியை வேண்டுவதுடன் இவ் மஹோற்சவத்தை முன்னெடுக்கும் ஆலய அறங்காவலர் சபை. அந்தண சிவாச்சாரியர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பிரதேச செயலாளர்.**
**சங்கானை.**

### தலைவரின் வாழ்த்துச்செய்தி



எமது ஆலய இரதோற்சவ சிறப்பிதழ் வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். "என் கடன் அவள் பணிசெய்து கிடப்பதே" என்பதற்கிணங்க வட்டுக்கிழக்கு வட்டுக் கோட்டை துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு புதிய தசகோண சிற்பத் தேர் அமைக்க ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உள்ளூர். வெளியூர் தர்ம உள்ளம் கொண்ட அடியவர்கள் அனைவரையும் முதலில் பணிந்து அவர்களுக்கு எம் மனமார்ந்த கோடி நன்றிகள். இன்று இரதோற்சவம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இச்செயல் அம்பாளின் அருள் அன்றி வேறெதுவும் இல்லை. எம்மை கருவியாகப் பயன்படுத்தி தனக்கு தேவையானதை தானே பெற்றுக் கொண்டாள் என்பதே உண்மை. தேர். தரிப்பிடம் என்பன அமைந்திருப்பது எம் எல்லோர் மனங்களிலும் பெரும் மன நிறைவைத்தருகின்றது. இது எமது கிராம மக்களின் ஒற்றுமையை பறை சாற்றுகின்றது. உங்களது ஆன்மிகப் பணியால் இன்று எமது ஆலயம் துரிதகதியில் பெருவளர்ச்சி அடைந்துவருகின்றது. தசகோண சிற்பத்தேர் நிகழ்வு சிறப்புற அடியவர்களுடன் நாமும் வாழ்த்துவதோடு இக் கைங்காரிய இறை பணியில் எம்மோடு பயணிக்கும் அடியவர்கள் அனைவருக்கும் அம்பாளின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.

அம்பிகை புரண அருளாட்சி அமைந்ததே அழகுறு தேரது
தும்பிமுகன் தாயவள் தொன்மை ஊரினில் துறட்டிப் பனையில்
நம்பிக்கைப் பிராட்டி நாயகி முத்துமாரி நயந்த தேரினை
தம்கை கூப்பியே தளராது வணங்கிட வாரீர் வாரீர்

**தலைவர்**
**இ.சிவகுமார்**
**வட்டுக்கிழக்கு துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் பரியாலனசபை.**

### ஆச்சாரியாரின் வாழ்த்துச் செய்தி



எல்லாம் வல்ல வட்டுக்கோட்டை துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் பாதார விந் தங்களை இருகரம் இறுகப் பற்றி வணங்குகிறோம்.

இவ் ஆலயத்தில் முன்னைய காலங்களில் மூன்று வாகனங்களை எமது கைவண்ணத்தில் உருவாக்கினோம். அதனைத் தொடர்ந்து ஆலய அன்னதான சபை மற்றும் சபை தலைவர் இரத்தினதுரை சிவகுமார் அவர்களின் வேண்டுதலின் பேரில் 2025 ம் ஆண்டு ஆடி பௌர்ணமி தினத்தில் ( தசகோண ) திராவிரமரபு சிற்பத்தேரை நிர்மானிப்பதற்கு அங்குரார்ப்பண நிகழ்வும் ஒப்பந்தமும் செய்யப்பட்டது. தொடர்ந்து வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அன்னை முத்துமாரி தாயின் அனுக்கிரகத்தால் எனது சிந்தனையில் (தசகோண ) கலிங்க மரபுத் தேரை நிர்மானிக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அதற்கு சபையினரின் பெரும் ஆதரவும் வழங்கப்பட்டு இத் தேரின் வேலைகள் அனைத்தும் பூர்த்தியாகி இன்றையதினம் இரதோற்சவம் காணுகின்ற பெரும் பேறை அடியேனும் பெற்றுள்ளேன்.

சுபம்

**A.T. P கோகுலன் ஸ்தபதி**
**ஸ்ரீ குலவாணி சிற்பாலயம்,**
**திருநெல்வேலி.**

### தேரின் மகிமை

ஆலய விழாவாக தேர் இழுப்பதை நாம் நமது உடம்பை ஒட்டிய வாழ்க்கைக்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தேரில் இருப்பதைப் போல் நமக்குள்ளும் இறைவனின் விம்பம் இருக்கிறது. தேரை இழுப்பதைப் போல ஆசா பாசங்கள் நம்மையும் இழுக்கின்றன. ஊர்வலம் முடிந்தவுடன் சுவாமி திரும்ப ஆலயத்துக்குள் போய் விடுகிறார். வாழ்க்கையை முடித்த நமது ஆத்மாவும் அதுவரை வாழ்ந்த உடலை விட்டு இறைவனிடம் திரும்பிவிடுகிறது.

கோயிலும் தேரும் இறைவன் உறையும் இடம். தேர் அனைத்து மக்களையும் சந்திக்க வைத்து உறவாட வைக்கும் ஒரு சமுதாய கேந்திரமாகவும் பயன்படும். உயர்ந்த எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள பயன்படும். ஊரை ஒற்றுமையாகக் கூட்டி வைக்க கூடிவாழச் செய்ய மக்களின் ஒற்றுமை சின்னமும் தேர் ஆகும். மக்களுக்கு ஆனந்தத்தையும் பக்தியையும் இது ஏற்படுத்தும். அது போல் இன்னுமொன்று. ஆண்டுதோறும் தெருவில் தேர் ஓடுவதால் தெருப்பராமரிப்பு நடக்கும். வியாபாரம் பெருகவும். சிறு வியாபாரிகள் பயன் அடையவும். குடிசைத் தொழில் செய்பவர்கள் விற்பனை செய்யவும் வாய்ப்பு கிடைக்கிறது. இப்படியான தேரை அன்பு நிறைந்த உள்ளத்துடன் நம்பிக்கையோடும் பக்தியோடும். வணங்கி இறைவனின் அருளைப் பெறுவோமாக.

### குருக்களின் ஆசியுரை



அம்பிகை அடியார்களே !

திருவருள் நிறைந்த துறட்டிபனை என்னும் பதியில் குடி கொண்டு அருள் புரியும் அகில புவன மாதா முத்துமாரி அம்பாளின் ஆலயத்தில் அன்னைக்கு புதிய சித்திரத்தேர் அமையப் பெற்றது மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். மஹோற்சவ காலத்தில் தேர்த்திருவிழா மிகவும் முக்கியமானதும் மேன்மை பொருத்தியதுமான பல வடிவான கோணங்களில் தேரின் அமைப்புக்களை ஆகமங்களில் காணமுடிகிறது. எம்பிராட்டி தேரில் ஏறிவரும் போது அடியார்களுக்கு சாம்பவ தீட்கைஷ வழங்குவார். "ராதா ரோகண காலே சர்வகாம பலப்பிரதம் ஆயள் விருத்தி காம் சைவ ஆரோக்கியம் புஷ்டி வர்த்தனம்" என்பது ஆகம வாக்கியம் இரண்டின் படி அம்பிகை (சுவாமி) தேரில் ஏறி வரும் காட்சியைப் பார்த்தால் எல்லா விருப்பங்களும் நிறை வேறும் நீண்ட ஆயுள் கிடைக்கும் வியாதிகள் நீங்கும். திடகாத்திரமான தேகம் உண்டாகும் என காண்க தேரின் உள்ளே கிழக்கு பாகத்தில் முருகப் பெருமானும் தென் பாகத்தில் தட்சணாமூர்த்தியும். மேற்குப் பாகத்தில் மஹா விஷ்ணுவும். வட பாகத்தில் பிரம்ம தேவரும். சக்கரங்களில் ஆர்ய சந்திரர்களும். அஸ்டராகங்களும். சதுர் வேதங்களும் நிறைவாக அமைவதாக (உத்தரகாரண) ஆகமம் கூறுகிறது தேர் வெள்ளோட்டம் கண்டபின் ஆச்சார்யார் ரதப் பிரதிஷ்டை செய்தல் வேண்டும். அதில் மந்திர. பதபுவன. தத்துவங்கள் பூஜை செய்யப்படும். நிறைவாக சுப முகூர்த்த வேளையில் அம்பிகையை எழுந்தருள செய்து வேத்கோச. மங்கள வாத்தியம் திருமுறை சங்கு துண்துபி முதலான சர்வமங்கல வாத்தியங்கள் முழங்க கொடி குடை. ஆலவட்டம் சமர்ப்பித்து அம்பிகை மஹா ராஜ வீதியில் அழைத்து வர வேண்டும். என காண்க அம்பிகையின் இத்தேர் திருப்பணியை செய்தவர்கள் விழாவில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் சகல நன்மைகளும் கிடைக்க பெற்று வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

**பிரதிஷ்டா இரத்தினம்**
**சிவ ஸ்ரீ. சு. மதுசூதனக்குருக்கள் பிள்ளையார் கோவில், சித்தங்கேணி**

### செயலாளரின் வாழ்த்துச் செய்தி



எமது வட்டுக்கோட்டை துறட்டிப்பனையில் பதிகொண்டிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் : பாதார விந்தங்களைப் பணிந்து கொண்டு அம்மாளின் இரதோற்சவ மலருக்கு வாழ்த்துச் செய்தியை அளிப்பதில் ஆலய செயலாளராகிய நான் பெருமையடைகின்றேன். தொன்று தொட்டு பலதரப்பட்ட வரலாற்று சிறப்பம்சங்களை எமது அம்பாளின் ஆலயமானது கொண்டுள்ளது. அத்தோடு எமது இளைஞர்களின் ஆன்மீக விழுமியங்கள் பற்றிய சிந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் எமது பயணத்தில் கற்று வருகிறார்கள். ஆலய அன்னதான சபையினரும் உள்ளூர். வெளியூர் மக்களும் இணைந்து கடந்து வந்த பயணத்தில் அம்பாளின் அருளாசியுடன் தேர் அமைப்பிற்கு உள்நாட்டு. வெளிநாட்டு அன்பர்களின் ஆதரவுடன் அம்பாளின் அருளாசியுடன் புதிய தசகோண சிற்பத் தேர் அமைக்கப்பட்டது என்பது பெருமையான ஒன்றாகும். இரதோற்சவம் சிறப்புற அமைய அம்பாளை வேண்டுவதோடு அனைவருக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**"வாரீர் வடம் பிடிப்போம் ஊர் கூடி**
**எம் பெருமாள் வரம் பெறுவோம்"**

**செயலாளர்**
**க.ஜெயக்குமார்**
**துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் பரியாலனசபை.**

### ஆசிச் செய்தி



துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு ஆலய அன்னதான சபையினரின் அயராத முயற்சியின் பலனாக கலையம்சங்களோடு கூடிய தசகோண தேர் ஒன்று உருவாக்கப் பட்டிருக்கின்றது. இத் தேர் உருவாக்கிய ஸ்தபதி குழுவினருக்கும். தேர் உருவாகுவதற்கு பலவழிகளிலும் பேருதவிகள் புரிந்த எம் அம்பாளுடைய மீளா அடியவர்கள் அனைவருக்கும் அம்பாளது திருவருள் என்றென்றும் நிறைய வேண்டும் என பிரார்த்தித்து நல்லாசிகள்" கூறுவதில் மன மகிழ்வு கொள்கின்றோம்.

**ஆலய குரு**
**பிரம்மஸ்ரீ பா.அமிர்தேஸ்வரசர்மா**
**(குறட்டிப்பனைப்பதி, வட்டுக்கோட்டை)**

**புதிய சித்திரத்தேர் உபயம் - அன்னதானசபை,**
**தேர் தரிப்பிட உபயம் - சிவதர்மவள்ளல் இராசையா, ஈஸ்வரகுமாரன் குடும்பம்**
**வாழ்த்துவோர் - அன்னதான சபையினர்**

(CS/59035) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூரில் மனித எச்சங்கள்; அகழ்வுப்பணிக்கு அனுமதி

திருகோணமலை, ஓக.8

**மனித எலும்பு எச்சங்கள் காணப்பட்ட சம்பூர்க் காணியில் மேலும் மனித எலும்புக்கூடுகள், மற்றும் எச்சங்கள் உள்ளனவா என்பதை அறிய, கிழக்கு பிராந்திய இராணுவக் கட்டளைத்தளபதியின் ஆலோசனையைப் பெற்று இராணுவ பாதுகாப்பு ஆளணியின் உதவியுடன் முறைப்படி அகழ்வு நடத்தப்பட வேண்டும் என்று மூதூர் நீதவான் தஸ்னீம் பௌஸான் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.**

மேலும், இதுதொடர்பான வழக்கு விசாரணையை எதிர்வரும் 26ஆம் திகதி எடுத்துக்கொள்வதாகவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

திருகோணமலை சம்பூரில் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட பகுதியில் அகழ்வுப் பணியை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்வதற்கான சட்டமாநாடு நேற்றுமுன்தினம் மூதூர் நீதிமன்றில் இடம்பெற்றது.

இதன்போது இதுவரை அங்கு கண்டெடுக்கப்பட்ட மூன்று எலும்புக்கூடுகளில் ஒன்று, 25 வயதிற்குக் குறைந்த ஆண் ஒருவருடையது. மற்றையது, 25 - 40 வயதுக்குட்பட்ட ஒருவருடையது. அடுத்தது 40 - 60 வயதுக்குட்பட்ட ஒருவருடையது என்றும் மாவட்ட சட்டமருத்துவ அதிகாரிஅறிக்கைமுன்வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பேசிய சட்டமருத்துவ அதிகாரி,

இந்த இடம் மயானம் என்பதற்கு இதுவரை ஆதாரங்கள் முன்வைக்கப்படவில்லை.

மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட எலும்பு எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த எச்சங்களுக்குரியவர்கள் இயற்கையாக மரணம் அடைந்தார்களா? அல்லது ஏதேனும் குற்றச்செயல்கள் மூலம் மரணம் நிகழ்ந்ததா? என்பதை கண்டறிய மேலும் ஆய்வுகள் செய்யப்படவேண்டும் என்று கூறினார். இந்தக் காணி அரச காணியாக உள்ள போதும் இங்கு ஒரு மயானம் இருந்ததற்குரிய ஆதாரங்கள் ஏதும் இல்லை என்று இந்த வழக்கு மாநாட்டில் தொல்பொருள் திணைக்களம், பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபை செயலாளர் ஆகியோரால் அறிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தஅறிக்கைகளைஆராய்ந்த பின்னரே நீதிமன்று அகழ்வு நடத்தப்படவேண்டும் என்ற உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கடந்த ஜூலை 19ஆம் திகதி மிதிவெடி அகற்றும் பணிகள் அந்தப்பகுதியில் இடம்பெற்ற போது, மனித மண்டையோடு, கால் எலும்பு என்பன கண்டுபிடிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. -(ச-50)

## 6 மாதங்களில் 21 மில்லியன் லீற்றர் எரிபொருள் விற்பனை

கொழும்பு, ஓக.8

நடப்பாண்டின் முதல் ஆறு மாதங்களில் விமான எரிபொருள் விற்பனை 21 மில்லியன் லீற்றர்களாக அதிகரித்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளுடன் போட்டி விலைகளைப் பராமரிப்பதன் மூலம் இந்த விற்பனை அதிகரிப்பை எட்ட முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## ஆஸி ஆளுநர் நாயகம் இலங்கைக்கு வருகை


கொழும்பு, ஓக.8

அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜாய் மோஸ்டின் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று வந்தடைந்தார்.

அவர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோருடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் சமந்தா ஜாய் மோஸ்டின், பண்டாரகம, மிரிஸ்ஸ மற்றும் வெலிகம ஆகிய இடங்களில் அவுஸ்திரேலியாவால் ஆதரிக்கப்படும் பல திட்டங்களையும் பார்வையிடவுள்ளார். (ச-இ)





## கிளிநொச்சிப் பாடசாலையருகே துப்பாக்கி ரவைகள் மீட்பு!

கிளிநொச்சி, ஓக.8

கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு அருகில் நேற்று வியாழக்கிழமை ஏராளமான துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத் துக்கு அருகில் நேற்றுக் காலை அதிகளவான துப்பாக்கி ரவைகள் சிதறிக் காணப்பட்டுள்ளன. இதனை அவதானித்த பாடசாலை நிர்வாகத்தினர் உடனடியாக கிளிநொச்சிப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்குத் தகவல் வழங்கினர். இதனையடுத்து அங்கு விரைந்து சென்ற பொலிஸாரும் இராணுவத்திரும் சிதறிக் காணப்பட்ட துப்பாக்கி ரவைகளை மீட்டுச் சென்றுள்ளனர். (ச-66,27,113)




## "மாஸ்க் இருக்கப் பயமேன்?"

மழைக்கு 'ரெயின்கோர்ட்' போட்டுக்கொண்டு திரிஞ்சால் பிரச்சினையில்லை, ஆனால் வெயில் கொளுத்தியெறியேக்கையும் அதே ரெயின்கோர்டைப் போட்டுக்கொண்டு திரிஞ்சால் ஏதோ மண்டைப்பிழை எண்டுதானே அர்த்தம். எந்தப் பொருளையும் அந்தத் தேவைக்கு மட்டும் தான் பாவிக்கோணும். ஆனால் எங்கடையாக்கள், ஒரு தேவைக்காக பாவிக்கிற பொருளை வைச்சே ஏழெட்டுத் தேவையளைச் சரிக்கட்டிப் போடுவினம். சைக்கிள் லைற்றை எரிய வைக்க கண்டுபிடிச்ச டைனமோவை வைச்சே ரீவியில படம் பார்த்த பரம்பரை நாங்கள். அப்பிடிப்பட்ட பரம்பரை கொரோனாக்காலத்தில பேமஸான முகத்துக்குப் போடுற மாஸ்க்கை எப்பிடி விட்டு வைக்கும்?

கொரோனா எண்ட பேர் மறைஞ்சு போனாலும், மாஸ்க் போடுற ஆக்களுக்கு மட்டும் குறைவில்லை. கொரோனா வரமுதல் றோட்டில ஆரும் மாஸ்க் போட்டுக்கொண்டு போனால் எல்லாரும் புதினமாப் பாப்பினம். ஆனால் கொரோனாவுக்குப் பிறகு மாஸ்க் போடுறதெண்டது சாதாரணமாப் போட்டுது. அதை வைச்சுக்கொண்டு எங்கடையாக்கள் கள்ளவேலையள் கனக்கப் பாக்கத் தொடங்கிட்டினம். இப்ப அநேகமான வீடுகளில சிசிரிவி கமெராக்கள் பூட்டிட்டினம். வீடுகள் மட்டுமில்ல கோயில்,குளம், கடை கண்ணியெல்லாம் இப்ப உந்த'சிசிரிவி' கமெரா மயம்தான். அதால ஆரும் கள்ளவேலையள் செய்தால் கமெராக்கள் காட்டிக்குடுத்திடும். அதில இருந்து தப்பிறதுக்காக இப்ப களவெடுக்கிறவங்கள் மாஸ்க் போட்டுக்கொண்டு தான் வாறாங்கள். கமெராவில உருவம் தெரிஞ்சாலும் கூட, முகத்தை மாஸ்க் மறைச்சிருக்கிறதால ஆர், எவர் எண்டு மட்டுக்கட்டேலாது. அதால இப்ப கள்ளருக்கெல்லாம் மாஸ்க் ஒரு கமெரா எதிர்ப்பு ஆயுதமா மாறிட்டுது.

கள்ளருக்கு மட்டுமில்லை, காதலிக்கிறவைக்கும் இப்ப மாஸ்க்தான் கண்கண்ட கடவுள். அதிலையும் பொம்பிளைப் பிள்ளையள் முகத்தில கறுப்பு மாஸ்க்கோட வெளிக்கிட்டினம் எண்டால், கட்டாயம் காதலிக்கிறவையைச் சந்திக்கத்தான் போகினம் எண்டது எல்லாருக்குமே தெரிஞ்ச சங்கதி. கள்ளக்கடத்தல்காரர் மாதிரி முகத்தை கறுப்பு மாஸ்க்கால மறைச்சுக் கொண்டு, யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்கரையில ஒவ்வொருநாளும் சோடி சோடியா பெடி பெட்டையள் வாறதும், மறைவான இடத்துக்குப் போய் மணித்தியாலக் கணக்கில பின்னிப்பிணைஞ்சபடி இருந்து கதைக்கிறதும் கண்கொள்ளாக் காட்சியள்தான். முந்தியெண்டால் இப்பிடி பெடிபெட்டையள் சோடியா இருந்தால், தெரிஞ்ச ஆக்கள் கண்டிட்டு அவையின்ர வீட்டுக்காராரிட்ட சொல்லிப் போடுவினம். அந்தப் பயத்திலையே பொம்பிளைப் பிள்ளையள் இப்பிடி பொது இடங்களில தங்களைக் காதலிக்கிறவையோட நெருக்கமா இருக்கமாட்டினம். ஆனால் இப்ப "மாஸ்க் இருக்கப் பயமேன்?". ஆருக்கும் அடையாளம் தெரியாது. அப்பிடி ஆரும் கண்ணையோ உடுப்பையோ அடையாளம் கண்டாலும், அது வேற ஆரையும் கண்டிருப்பினம் எண்டு சமாளிக்கவும் வசதி. கொரோனா போனாலும், உப்பிடியான காதலிக்கிற சோடியள் இருக்கும் மட்டும் மாஸ்க் விக்கிறவையின்ர காட்டில மழைதான் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மனுசங்கடா'

## திரைப்படம் திரையிடல்

யாழ்ப்பாணம், ஓக.8

யாழ்ப்பாணத் திரைப்படக்கழகத்தின் 13 ஆவது திரைப் பட நிகழ்வை முன்னிட்டு, அம்ஷன் குமார் நெறியாள் கையில் உருவான 'மனுசங்கடா' திரைப்படம் திரையி டப்படவுள்ளது.

18 / 2 அம்மன் வீதியிலுள்ள (பலாலி வீதி, வீனஸ் மருத்துவமனை அருகில்), எங்கட புத்தகங்கள் இல் லத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இலவசமாகக் காண்பிக்கப்படவுள்ளது.

கெய்ரோ உலகத் திரைப்பட விழாவில் இந்தத் திரைப் படம் திரையிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ச-25)

# பறவைகள் விழிப்புணர்வு பலகை நடும் நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஓக.8

இயற்கை ஊக்குவிப்புக் கழகம் மற்றும் டயலொக் நிறுவனம் இணைந்து பறவைகள் பற்றிய விழிப்புணர்வுப் பலகையை பண்ணை வீதி மண்கும் பான் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் நடவுள்ளது. இந்த நிகழ்வு நாளை சனிக்கிழமை பி.ப.4 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச)

# பழனி ஆண்டவர் ஆலய உற்சவம்

சாவகச்சேரி ஓக.8

சாவகச்சேரி டச்சுவீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய உற்சவம் கடந்த 26ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது. இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ.சோமஸ்கந்த சக்திதரக் குருக்கள் தலைமையில் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஸ்ரீ பழனி ஆண்டவரின் ஸ்ரீ பழனி வேல் பவனி இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக தென்மராட்சி இலக்கிய அணியின் உறுப்பினர் சு.சுதர்சன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி இந்து கலாசார உத்தியோகத்தர் கு.குணகீதா, சாவ கச்சேரி நகர கிராம உத்தியோகத்தர் கு.பரமா னந்தம், சாவகச்சேரி நகர் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கா. ஈஸ்வரலிங் கம் ஆகியோர் கலந்துகொள்வுள்ளனர்.

இதன்போது அறநெறிப்பாடசாலை மாண வர்களின் காவடியாட்டம், கோலாட்டம், புரவி யாட்டம், மயிலாட்டம், புலியாட்டம், சிலம்பம், தீப்பந்தாட்டம், சுருள்வாள் சுழட்டல், உடுக்கு வாத்திய நிகழ்வு, தவில் நாதஸ்வரக்கச்சேரி என்பன இடம்பெறவுள்ளன.

(ச-41-131)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா
077 334 1281

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரி அண்மையில் உள்ள கட்டுமான நிறுவனத்திற்கு HNDE (Civil) தகுதியுடன் 1 அல்லது 2 வருட அனுபவம் பெற்ற தொழிநுட்பவியலாளர் (சிவில்) தேவை.
விருப்பமுள்ளவர்கள் தங்கள் CV ஐ 077 728 3692 என்ற WhatsApp இலக்கத்திற்கு அனுப்பவும்.

## AMENDMENTS NOTICE
## INVITATION FOR BID (IFB) -2025/05
## VALIKAMAM SOUTH WEST PRADESHIYA SABHA MANIPAY.

The following amendments are made for the grade required at the table of para no 09 of the above bid invitations published at the Uthayan newspaper on 04th August 2025.

| BID ID | Grade Required |
|---|---|
| NP/14/41(16)/W/CF/2025/14 | C9 or Above (Highway) |
| NP/14/41(16)/W/CF/2025/15 | C9 or Above (Highway) |
| NP/14/41(16)/W/CF/2025/16 | C9 or Above (Highway) |

The other contents remain unchanged.

Chairman
Local Authority Procurement Committee,
Valikamam South west Pradeshiya Sabha,
Manipay
08.08.2025

## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
## பெறுகை அறிவித்தல்.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கான தேசிய பெறுகை பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | ஒப்பந்த காலம் | மதிப்பிட்டுத் தொகை (ரூபா) (வரி நீங்கலாக) | ICTAD தர பதிவு | கேள்வி வங்கி பிணைப் பணம் / காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/13/IMP/25/11 11-17 | Repair & Improvement Works of Gents Staff Quarters at District Secretariat, Kilinochchi, | 90 நாட்கள் | 14.3 மில்லியன; | C7 or above, Building | ரூபா. 214,500/- 07.12.2025 வரை | 3500.00 |
| 2 | KN/EB/13/IMP/25/11 11-18 | Painting & Repairing Works in Staff Officer's Family Quarters (No: A-02) at District Secretariat, Kilinochchi | 60 நாட்களா; | 5.6 மில்லியன; | C8 or above, Building | ரூபா. 84,000/- 07.12.2025 வரை | 2000.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்க ளாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப் பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II. இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவணைப்படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்.
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285663, பக்ஸ் இல:-0212283966).
3. கேள்வி ஆவணங்களை 11.08.2025ஆம் திகதியிலிருந்து 22.08.2025ஆம் திகதி வரை முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப் பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting) 20.08.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட, பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல்வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "KN/........................" என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு 25.08.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சு.முரளிதரன்,
திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் / மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

## மரண அறிவித்தல்

தோற்றம் | மறைவு
15 | 05
12 | 08
1950 | 2025



### கந்தையா ஜெயரத்தினம்

**(ஓய்வுபெற்ற தபால் ஊழியர், பண்டத்தரிப்பு)**

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், அராலி மத்தியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா ஜெயரத்தினம் (ஓய்வு பெற்ற தபால் ஊழியர், பண்டத்தரிப்பு) அவர்கள் கடந்த (06.08.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அற்புதராணியின் பாசமிகு கணவரும், பிரதாபன், ரேணுகா (லண்டன்), துவாரகா (மாணவி - யாழ் பல்கலைக்கழக கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிதர்சன் (லண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான விஜயரத்தினம், யோகமலர், அன்புமலர் மற்றும் அரசரத்தினம், தவமலர், குணரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற அற்புதராஜா (தினமுரசு - ஆசிரியர்) அவர்களின் அன்பு மைத்துனரும், யசோகுமாரியின் சகோதரரும், பிரியதர்சன், பிரியகாந்த், பிரியராஜ், சிந்துஜா, பானுஜா, விக்கினேஸ்வரி, சிகலா, துர்க்கா, கஜவதனி ஆகியோரின் மாமனாரும், விஜயகுமார், சிவகுமார், சுரேஸ்குமார், தனராஜ், மோகனராஜ், ஜெயந்தி ஆகியோரின் சிறிய தந்தையும், லக்ஷன், பிரியா, தனஞ்ஞா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-08-2025) வெள்ளிக் கிழமை காலை 8:00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூநாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/3794) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

தலைவனின் வேகமே அந்த அணியின் வேகம் என்பதை நான் எப்போதும் கண்டுள்ளேன்.


– லீ ஐயகோக்கா –


## களைபிடுங்க வேண்டிய நேரமிது!

இலங்கையில் பாடசாலை மாணவர்களில் குறிப்பிடத்தக்க வீதத்தினர் மன அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்ற தகவலை சுகாதார அமைச்சு வெளியிட்டிருக்கின்றது. கடந்த ஆண்டு நடத்தப்பட்ட பாடசாலை சுகாதாரக் கணக்கெடுப்பை அடிப்படையாகக்கொண்டு இந்தத் தரவு திரட்டப்பட்டிருக்கின்றது. சுகாதார அமைச்சின் தரவுகளின்படி 22.4 வீதமான மாணவர்கள் தனிமையை உணர்கின்றனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அதேபோன்று 11.9 வீதமான, 13 முதல் 17 வயதுடைய மாணவர்கள் தூக்கமின்மையை எதிர்கொள்கின்றனர் என்பதும், 18 சதவீதமான மாணவர்களுக்கு உளச்சோர்வு அறிகுறிகள் உள்ளன என்பதும், 75 சதவீதமான மாணவர்களுக்கு தங்கள் உளநலப் பிரச்சினைகளைப் பகிர்வதற்கு நெருங்கிய நபர்கள் இல்லையென்பதும் அமைச்சின் ஆய்வுகளில் தெரியவந்திருக்கின்றது.

பாடசாலை மாணவர்கள் - நாட்டின் எதிர்காலச் சந்ததிகள் - இளவயதில் அதுவும் பாடசாலைக் காலத்தில் மன அழுத்தத்துக்கு உட்பட்டுள்ளமை சாதாரணமாகக் கடந்துவிடக்கூடிய விடயமல்ல. மாணவப் பருவத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் மன அழுத்தம் அவர்களின் வாழ்க்கையைத் தவறான திசைகளில் இழுத்துச் சென்றுவிடக்கூடிய அபாயம் இருக்கின்றது. அதுமட்டுமன்றி கற்றல் நடவடிக்கைகளிலும் முழுமையாக தங்கள் கவனத்தைச் செலுத்துவதற்குத் தடையாகவும் மாறிவிடுகின்றது. மாணவர்கள் எதிர்கொள்ளும் இந்தச் சிக்கலுக்கு பெற்றோர், பாடசாலைகள் மட்டுமல்லாமல் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் காரணமே. சிறார்களின் உளச் சுகாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான பொறுப்பு அனைவருக்குமே உண்டு.

வெறுமனே தரவுகளை மட்டும் சேகரித்துக்கொண்டிருக்காது இந்த நிலைமையை மாற்ற அரசாங்க மட்டத்தில் தடுப்பு மற்றும் சிகிச்சைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவது அவசியம். பாடசாலைகளில் மன ஆரோக்கிய விழிப்புணர்வுத்திட்டங்கள், ஆலோசனை மையங்கள் மற்றும் உளவியல் முதன்மைப் பராமரிப்பு சேவைகள் அதிகரிக்கப்பட வேண்டும். பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் இணைந்து மாணவர்களின் மனநலத்தை மேம்படுத்தும் முயற்சிகளை ஆரம்பிக்கவேண்டும். பிள்ளைகளுக்கும் தங்களுக்குமான இடைவெளியை பெற்றோர் குறைக்கவேண்டும். அதேநேரம் பிள்ளைகளுடன் செலவிடும் - பேசும் நேரத்தை பெற்றோர் அதிகரிப்பதும் அவசியம். மாணவர்களின் உளவியல் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகளைத் தேடாவிட்டால், அவை சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் பிரச்சினையாக எதிர்காலத்தில் மாற்றமடையும். மாணவர்கள் எதிர்நோக்கும் மன அழுத்தங்களுக்கு சமூகப் பின்னணிகள், பொருளாதாரச் சுமைகள், கல்வி அழுத்தங்கள் மற்றும் குடும்பப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு காரணிகள் பங்களிக்கின்றன. அவற்றைக் கண்டறிந்து களையாவிட்டால் எதிர்கால சமூகத்துக்கு ஒரு பெரும் சுமையாக இந்தப் பிரச்சினை மாறிவிடும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அழுத்தங்களையும், சுமைகளையும் களைபிடுங்கினாலேயே, மாணவப்பயிர்கள் செழிப்பாக வளரமுடியுமென்பதை மனதில் கொள்வோம்.



## பாடசாலை மாணவர்களிடம் அதிகரிக்கும் மனஅழுத்தம்

### சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு, ஓக.8

பாடசாலை மாணவர்களிடையே மனஅழுத்தம் அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பாடசாலை சுகாதாரக் கணக்கெடுப்பில், 22.4 வீத மாணவர்கள் தனிமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். 11.9 வீத மாணவர்கள் கவலை காரணமாகத் தூக்கமின்மையை எதிர்கொள்கின்றனர். 18 வீத மாணவர்களிடம் மனச்சோர்வு அறிகுறிகள் தென்பட்டன என்று சுகாதார அமைச்சின் உளநலப் பணிப்பாளர் அலுவலகத்தின் பதில் பணிப்பாளர் மருத்துவர் லக்மினி மாகொடரத்ன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாட்டில் தினசரி சுமார் 8 உயிர்மாய்ப்புகள் பதிவாகின்றன என்று தேசிய மனநல நிறுவனத்தின் மருத்துவர் சஜீவன அமரசிங்க தெரிவித்துள்ளார்.

1996ஆம் ஆண்டு உலகத் தரவரிசையில் உயிர்மாய்ப்புகளில் இரண்டாம் இடத்தில் இருந்த இலங்கை, தற்போது ஒரு இலட்சத்துக்கு 15 உயிர்மாய்ப்புகளாக அந்த எண்ணிக்கையைக் குறைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## மஹரகமவில் துப்பாக்கிச்சூடு ஒருவர் காயம்

கொழும்பு, ஓக.8


மஹரகம, நாவின்னவில் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார் என்றும் காயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## போதைப்பொருளுடன் இந்தியர் மூவர் கைது

கொழும்பு, ஓக.8

12 கிலோகிராம் 160 கிராம் குஷ் ரக போதைப்பொருளுடன் இந்தியாவைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து போதைப்பொருள் தடுப்புப்பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின்போதே இரண்டு பெண்கள் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)



## அத்துமீறி நுழைந்து மீன்பிடி; 10 தமிழக மீனவர்கள் கைது

கொழும்பு, ஓக.8

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 10 பேர் பத்தலன்குண்டுப் பகுதியில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகிலிருந்து நவீன தொழில்நுட்பச் சாதனங்கள், ஜி.பி.எஸ். வரைபடங்கள், மீன்களைக் கண்டறியும் கருவிகள் போன்றனவும் மீட்கப்பட்டுள்ளன. (ச-இ)

## கிறீம்கள்; பெண்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஓக.8

இலங்கையில் சந்தையில் விற்கப்படும் 49 வகையான அழகுசாதனப் பொருள்களில், அதிக அளவுகளில் கன உலோகங்கள் இருப்பதாக நுகர்வோர் விவகார ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றில், சருமத்தை வெண்மையாக்கப் பயன்படுத்தப்படும் அழகுசாதனப்பொருள்கள் மிக முக்கியமானவை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

நாளை

சனிக்கிழமை - ஆடி 24

09.08.2025

சுபநேரம் : 03.04 - 04.31
ராகுகாலம் : 04.04 - 10.34



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகளில்

8ஆம் ஆண்டு 31ஆம் ஆண்டு





அமரர்
**துரைராசா பவானிதேவி**
மலர்வு 10.01.1946 உதிர்வு 10.09.2017

அமரர்
**தம்பு துரைராசா**
மலர்வு 07.01.1936 உதிர்வு 21.07.1994

**திதி: சதுர்த்தசி 08.08.2025**

எமைப் பெற்றெடுத்த அன்புத் தெய்வங்களே - அதேபோல்
அம்மம்மா ! அம்மப்பா என்றழைத்த
பேரப்பிள்ளைகள் கூட இருந்து
மணநாளைப் பார்க்க முடியாத பாவிகளாய் - நீங்கள்
எமை விட்டுப் பிரிந்து விட்டீர்களே ! - என்றும்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கும்

**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.** (CS/59028)J-1

**என்றும் நினைவுடன்**
**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்**

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 01 பொன்னாலை வீதியில் அமைந்துள்ள 718 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகிறது. இவ்வாதனத்தை காலி வெள்ளவத்தையைச் சேர்ந்தவர்களான சின்னம்மா கனகராசாவும் பெண் சரஸ்வதி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு கே.எம்.இராதா கிருஷ்ணன் முகதாவில் 05.04.2011ம் திகதி 632ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 25 குளி 5.87 அளவு கொண்ட ஆதனத்தை மகாதேவன் அமிர்தலிங்கம் பெண் சுமித்திராவிற்கும் மகாதேவன் அமிர்தலிங்கத்திற்கும் நன்கொடையாக வழங்கியுள்ளார். குறித்த ஆதனம் காரைநகர் வீதி. வில்லூன்றிப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்தவர்களான மகாதேவன் அமர்தலிங்கமும் பெண் சுமித்திரா ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு கே.எம் இராதாகிருஷ்ணன் முகதாவில் 25.06.2011ம் திகதி 659ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 4 அளவு கொண்ட ஆதனத்தை யாக்கோப்பிள்ளை கிறிசாந்துவிற்கு அறுதியாக வழங்கியள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஓட்டுமடத்தை சேர்ந்த யாக்கோப்பிள்ளை கிறிசாந்து என்பவர் பிரசித்த நொத்தாரிசு கே.எம்.இராதாகிருஷ்ணன் முகதாவில் 16.02.2012ம் திகதி 8800ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2 குளி 12 அளவு கொண்ட ஆதனத்தை செபமாலை. பிரான்சிஸ்சிற்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம்.மானிப்பாய் வீதி ஓட்டுமடத்தை சேர்ந்த பிரான்சிஸ் கைம்பெண் அன்னம்மாவும் செபமாலைபிலோமினாவும் பிரான்சிஸ் கலிஸ்ரனும் துஸ்யந்தன் சர்மிளாவும் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 2023.09.09 ம் திகதி 16138ம் இலக்கத்தில் நிறைவேறிய அழியா நன்கொடை உறுதி மூலம் யாக்கோப்பிள்ளை கிறிசாந்து பெண் யோகராணி என்பவரிற்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று யாழ்ப்பாண மாநகர சபை யாழ்ப்பாண பிரதேச செயலகம் J/88 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள வண்ணார் பன்னை வடமேற்கு இறை "கிழவனோடையும் மணற்காடு கோம்பயனும்" விஸ்தீரணம் நில.பர 2குளி 12 கடையும் கிணறும். மற்றுமதற்குச் சேர்ந்தவைகளுக்குமான எல்லைகள்

கிழக்கு :- மகாவேன் அமிர்தலிங்கத்திற்கும் பெண் சுமித்திராவிற்குமான ஆதனம்
வடக்கு :- மகாவேன் அமிர்தலிங்கத்திற்கும் பெண் சுமித்திராவிற்குமான ஆதனம்
மேற்கு :- முதலிகுள வாய்க்கால்
தெற்கு :- மானிப்பாய் வீதி இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை யாக்கோப்பிள்ளை கிறிசாந்து பெண் யோகராணி என்பவர் தமது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு உறுதிப்படுத்தப்பட்ட மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது யாக்கோப்பிள்ளை கிறிசாந்து பெண் யோகராணி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்**
**யாழ் மாநகரசபை**
(CR/45731) J-1

## மரண அறிவித்தல்

மலர்வு 25 . 02 . 1946



உதிர்வு 07 . 08 . 2025

### திருமதி. சண்முகநாதன் விமலாதேவி

கொக்குவிலை பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டை கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சண்முகநாதன் விமலாதேவி அவர்கள் நேற்று (07.08.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - மங்கையற்கரசி தம்பதியினரின் அன்பு மகளும், சண்முகநாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லத்துரை, சரஸ்வதி, மகேஸ்வரி, செல்வரட்ணம், அரசரட்ணம் மற்றும் செல்வநாயகம், மனோகரி (சாந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மதிவதனி (சுவிஸ்), ஸ்ரீரங்கன் (கம்ஷன் - பிரான்ஸ்), நிமலவேணி (கொலண்ட்), நீலவேணி (சித்த ஆயுள் வேதம் - யாழ் மாநகரசபை) ஆகியோரின் அன்பு தாயாரும், முரளி (சுவிஸ்), ஜீவராஜ் (கொலண்ட்), சுயந்தி (பிரான்ஸ்), யுகராஜ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், துஷாரா, துவாரகன், சாயிநிஷா, ஹரீன், யவீன், அஜய் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 01.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஈச்ச மோட்டை,**
**கொழும்புத்துறை.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**யுகராஜ் - 077 275 1561**

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 12 . 1946



மறைவு 01 . 08 . 2025

### Dr. துரைரத்தினம் கதிர்காமகார்த்திகேயன்

**(ஓய்வு பெற்ற கண் வைத்தியநிபுணர்)**

அராலி மேற்கைப் பிறப்பிடமாகவும், இலண்டனை வதிவிடமாகவும் கொண்ட Dr.துரைரத்தினம் கதிர்காமகார்த்திகேயன் (ஓய்வு பெற்ற கண் வைத்தியநிபுணர்) அவர்கள் கடந்த (01.08.2025) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைரத்தினம் (ஆசிரியர் மானிப்பாய் இந்துக் கல்லூரி) செல்வரத்தினம் (தருமகர்த்தா போயிட்டி ஸ்ரீ நாகபூஷணியம்மை தேவஸ்தானம்) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவஞானம் (தபாலதிபர்) - மீனாட்சி (UK) தம்பதியரின் அன்பு மருமகனும், வரலட்சுமியின் (UK), அன்புக் கணவரும், Dr.சங்கரி (UK), Dr.நாராயணி (UK), ஆகியோரது பாசமிகு தந்தையும், பிலிப் (UK) இன் மாமனாரும், வாணி, ஈசன், சேயோன் ஆகியோரின் பாசமிகு பேரனாரும், காலஞ்சென்ற அப்புலிங்கம் (பொறியியலாளர் USA), சிவசத்திவேல் (பட்டயக் கணக்காளர் Australia), காலஞ்சென்ற பதஞ்சலி (முகாமைத்துவ கணக்காளர் UK), நாகராஜேஸ்வரி (சட்டத்தரணி) ஆகியோரது அன்புச் சகோதரரும், Dr.விஜயலட்சுமி (UK), கௌரி (கணக்காளர் Canada) ஆகியோரது அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (10.08.2025) ஞாயிற்றுக் கிழமை இலண்டனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தகவல்: சகோதரி**
**திருமதி. நாகராஜேஸ்வரி சிவபாதம்**
**0773311137**
(CS/59048) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

**Ceylon Green Life Plantation (Pvt) Ltd**

நிறுவத்துடன் வணிக உறவுகளில் ஈடுபட்ட அனைத்து நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் கவனத்திற்கு



**திரு.செல்லத்தம்பி ஜெசிகரன்**

தேசிய அடையாள அட்டை இல.781452360V
முகவரி: பவுன்டரி வீதி, பெரியக்கல்லாறு 01

மேற்கண்ட நபர் எமது நிறுவனத்தில் வலய முகாமையாளர் (Zonal Manager) பதவியில் பணியாற்றியவர். 2025 ஜூலை 07ம் திகதி முதல் எமது நிறுவனத்தில் பணியில் இல்லை என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

எனவே மேற்குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் மேற்படி நபர் எமது நிறுவனத்தின் பெயரில் மேற்கொள்ளும் எந்தவொரு உடன்படிக்கையையோ அல்லது பரிவர்த்தனையையோ தொடர்பாகவும் Ceylon Green Plantation (Pvt) Ltd நிறுவனம் பொறுப்பேற்காது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

Ceylon Green Plantation (Pvt) Ltd
Seeduwa.

## முக்கிய அறிவித்தல்

**Ceylon Green Life Plantation (Pvt) Ltd**

நிறுவத்துடன் வணிக உறவுகளில் ஈடுபட்ட அனைத்து நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் கவனத்திற்கு



**திரு.S.M.ஆனந்தராஜன்**

தேசிய அடையாள அட்டை இல.81296750V
முகவரி: ராமகிருஷ்ணா வீதி, களுதாவளை 03, கல்வாஞ்சிக்குடி

மேற்கண்ட நபர் எமது நிறுவனத்தில் துணை பொது முகாமையாளர் (Assistant General Manager) பதவியில் பணியாற்றியவர். 2025 ஆகஸ்ட் 04ம் திகதி முதல் எமது நிறுவனத்தில் பணியில் இல்லை என்பதை இத்தால் அறியத்தருகிறோம்.

எனவே மேற்குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் மேற்படி நபர் எமது நிறுவனத்தின் பெயரில் மேற்கொள்ளும் எந்தவொரு உடன்படிக்கையையோ அல்லது பரிவர்த்தனையையோ தொடர்பாகவும் Ceylon Green Plantation (Pvt) Ltd நிறுவனம் பொறுப்பேற்காது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

Ceylon Green Plantation (Pvt) Ltd
Seeduwa.

# அரசியற்கைதிகளின் விடயத்தில் உத்தரவாதம் வழங்க முடியாது!

## நீதி அமைச்சர் கைவிரிப்பு

கொழும்பு, ஓக. 8

தமிழ் அரசியற் கைதிகளில் சுமார் 15 பேர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்புக்காகக் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த விடயத்தில் நீதி அமைச்சால் எந்த உத்தரவாதத்தையும் வழங்க முடியாது என்று நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில், தமிழ் அரசியற் கைதிகள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதன்படி விடுதலைப் புலிகள் அமைப்பின் சந்தேகநபர்கள் 4 பேர், விடுதலைப் புலிகள் அமைப்பின் 8 உறுப்பினர்கள், ஆயுள் தண்டனை கைதிகள் 3 பேர், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு மேன்முறையீடு செய்துள்ள 2 கைதிகள், 2 மரண தண்டனைக் கைதிகள் ஆகியோர் வெலிக்கட , மெகசின், மஹர, தும்பர, பூஸா மற்றும் நீர்கொழும்பு ஆகிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தால் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகள் தமது தண்டனைக் காலம் நிறைவடைந்ததன் பின்னர் விடுதலையாவார்கள். அல்லது நீதிமன்றத்தின் ஊடாக பிணையளிக்கப்படும் பட்சத்தில் விடுவிக்கப்படுவார்கள் அல்லது மேன்முறையீடு செய்து பிணை பெற்றுக்கொள்ளலாம்.

சிறைக்கைதிகள் விடுவிப்பு தொடர்பில் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்படும் ஏற்பாடும் காணப்படுகிறது. தமிழ் அரசியல் கைதிகளில் சுமார் 15 பேர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளார்கள். என்னையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள். இந்த விடயத்தில் என்னால் உத்தரவாதம் வழங்க முடியாது. ஜனாதிபதியே இறுதி முடிவை எடுப்பார் - என்றார். (ம-இ)

# சுயாதீன ஊடகவியலாளர் விசாரணைக்கு அழைப்பு!

முல்லைத்தீவு - குமுழமுனையைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளர் கணபதிப்பிள்ளை குமணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார். விசாரணைக்கு அவசியமான வாக்குமூலம் பதிவதற்காக வருமாறு அவருக்கு நேற்றைய தினம் வழங்கப்பட்டுள்ள அழைப்பாணைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு அளம்பில் பொலிஸ் நிலையத்தில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு வருகை தந்து விசாரணைப் பொறுப்பதிகாரியைச் சந்திக்குமாறு அழைப்பாணைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-66)

## விமானம் மூலம்

# தாயகம் திரும்பிய தம்பதியர் கைது!

## பலாலியில் நேற்றுமுன்தினம் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 8

இந்தியாவிலிருந்து விமானம் மூலம், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு வருகைதந்த தம்பதி பலாலி விமான நிலையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் 1996ஆம் ஆண்டு தலைமன்னாரில் இருந்து இந்தியாவுக்குப் படகு மூலம் சென்றுள்ளனர். பின்னர் அவர்கள் நீண்டகாலமாக மண்டபம் அகதி முகாமில் தங்கியிருந்தனர் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய குடிவரவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் நடத்திய விசாரணைகளின் பின்னர் இருவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-66)

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

## சிறப்புரிமைகள்...

முன்வைக்கப்பட்டது. இது தொடர்பான தீர்மானத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கி, அது தொடர்பான அறிவித்தல் வர்த்தமானி அறிவித்தலிலும் வெளியிடப்பட்டுள்ளது. இதையடுத்தே முதலாம் வாசிப்புக்கென நாடாளுமன்றத்தில் சட்டவரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

# தெய்வீக உரை

யாழ்ப்பாணம், ஓக. 8

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசிரியரும், சைவப் புலவருமான நி.பாபுதரன் கலந்துகொண்டு 'முருக பக்தியாளர்கள்' எனும் தலைப்பில் தெய்வீக ஆன்மிக உரை நிகழ்த்தவுள்ளார். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், . தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சிதரும் செய்தி வந்து சேரும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சற்றுத் தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்:** மனதில் இனம் தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** காரிய அனுகூலம் உண்டாகும். தந்தை வழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கிய முடிவுகளை பிற்பகலுக்கு மேல் மேற்கொள்வது சாதகமாக முடியும். எதிர்பார்த்த நல்ல செய்தி வந்துசேரும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**விருச்சிகம்** : வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். வெளியூர்ப் பயணத்தைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாமதம் ஏற்படும்.


**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குப் பணியின் காரணமாக பயணம் மேற்கொள்ள நேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

# SpaceX - STARLINK நிறுவனம் SINGERஐ இலங்கையின் அங்கீகாரமுடைய சில்லறை விற்பனையாளராக நியமித்துள்ளது

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட SpaceX நிறுவனம், இலங்கையின் முன்னணி நுகர்பொருள் மற்றும் வீட்டு உபயோக சாதனங்களை விற்பனை செய்யும் நிறுவனமான SINGER ஸ்ரீ லங்காவை, Starlink செய்மதி இணையதள சேவையின் அங்கீகார சில்லறை விற்பனையாளராக நியமித்துள்ளது. நாட்டின் பல பகுதிகளில் பாரம்பரிய இணைய வசதிகள் கிடைக்காத சூழலில், இந்த ஒப்பந்தம் இணைய அணுகலைப் புரட்சி செய்யும் முக்கியமான கட்டமாக அமைந்துள்ளது.




SpaceX நிறுவனம் உருவாக்கிய Starlink என்பது உயர் செயற்றிறனுடைய செய்மதி இணையதள அமைப்பாகும். இது உலகின் எந்த இடத்திலும் வேகமான, நம்பகமான மற்றும் வரம்பற்ற இணைய சேவையை வழங்கும்வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கீழ் நில வட்டத்திலுள்ள நூற்றுக்கணக்கான செய்மதிகளை பயன்படுத்தி, இது நிலத்தில் இருக்கும் கட்டமைப்புகளின் வரம்புகளைத்தாண்டி, வாடிக்கையாளர்களுக்கு தடையில்லாத இணைய அனுபவத்தை வழங்குகிறது. இந்த தொழில்நுட்பம் இலங்கையில் கிடைப்பது, பல ஆண்டுகளாக பொருளாதார வளர்ச்சி, கல்வி மற்றும் டிஜிற்றல் உள்ளடக்கத்தை தடுக்கும் இணையமின்மை சிக்கலைத் தீர்க்கும் மிகப்பெரிய வாய்ப்பாகும்.

இந்த முக்கியமான கூட்டாண்மையின் மூலம், உலக தரத்திலான தொழில்நுட்பங்களை இலங்கை மக்களுக்கு அருகிலே கொண்டு செல்லும் SINGER நிறுவனம், நாட்டில் தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் முன்னணி சக்தியாக தன்னை இன்னுமொருமுறை நிலைநிறுத்தியுள்ளது. Starlink சாதனங்களை SINGER நிறுவனத்தின் விரிவான விற்பனை மற்றும் ஆன்லைன் வலையமைப்பின் மூலமாகக் கொள்முதல் செய்து, செயற்படுத்த வாடிக்கையாளர்களுக்கு முடியும். அதிக இணையத்தரவினைப் பயன்படுத்தும் வீட்டு உபயோகத்திற்கோ, தொலைதொடர்பு தேவைப்படும் தொழிலாளர்களுக்கோ, நிறுவனங்களுக்கோ, பள்ளிகளுக்கோ, விவசாயம், அவசர சேவைகள், தொழில் முயற்சியாளர்கள், பயணிகளுக்கு இது நிலையான உயர் வேக இணைய சேவையை வழங்குகிறது.

இந்த அறிவிப்பு குறித்து SINGER ஸ்ரீ லங்கா பிஎல்சி குழும நிர்வாக இயக்குநர் மகேஷ் விஜேவர்தன கருத்துத் தெரிவிக்கையில், "SpaceX முறையாக அங்கீகரிக்கப்பட்ட இலங்கையின் முதல் நிறுவனம் என்ற வகையில் Starlink உடனான எங்கள் கூட்டாண்மை ஒரு முக்கியமான தருணத்தைக் குறிக்கிறது. வடக்கு முதல் தெற்கு வரை இலங்கையர்களை நம்பகமான மற்றும் எல்லையற்ற இணைய அணுகலுடன் இணைக்கும் உலகின் மிகவும் மேம்பட்ட செயற்கைக்கோள் இணைய அமைப்புகளில் ஒன்றை அணுகுவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம் என்றார்"

SINGER ஸ்ரீ லங்காவின் தலைவர் மொஹான் பண்டிதகே கூறுகையில், "இந்த கூட்டாண்மை SINGER மற்றும் இலங்கைக்கு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. Starlink அறிமுகப்படுத்த அமெரிக்காவின் SpaceX உடன் கைகோர்ப்பதன் மூலம், நாட்டின் டிஜிற்றல் இணைப்பை மேம்படுத்துவதோடு, தொழில்நுட்பம் சார்ந்த முன்னேற்றத்திற்கான அடித்தளங்களையும் வலுப்படுத்துகிறோம். ஹேலிஸ் குழுமத்தின் ஒரு பகுதியாக, தைரியமான, எதிர்காலத்தை மையமாகக் கொண்ட தீர்வுகள் மூலம் தேசிய டிஜிற்றல்மயமாக்கல் முயற்சிகளை ஆதரிப்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

பயனர்கள் இப்போது Starlink மொபைல் செயலி மூலம் தங்கள் Starlink சேவையை சுயாதீனமாக செயல்படுத்தலாம். மாதாந்தச் சந்தா வரம்பற்றது மற்றும் வாடிக்கையாளர்கள் தங்கள் சொந்த விதிமுறைகளில் தங்கள் இணையப் பயன்பாட்டை நிர்வகிக்கும் சுதந்திரத்தையும் வழங்குகிறது.

ஒவ்வொரு Starlink வன்பொருள் தொகுப்பிலும் Starlink டிஷ், WiFi ரவுட்டர், கேபிள்கள் மற்றும் பவர் எடப்டர் ஆகியவை அடங்கும். SINGER குடியிருப்பு மற்றும் வணிக தரப் பயன்பாடுகளுக்கு ஏற்றவாறு மாறுபாடுகளை வழங்குவதோடு, சாதன விலை 69,000 LKR முதல் இருக்கும். அனைத்து சாதனங்களும் SINGERரின் நம்பகமான விற்பனைக்குப் பிந்தைய சேவை மற்றும் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள முடியும். நாடுமுழுவதும் உள்ள SINGER மற்றும் Singer Mega விற்பனை நிலையங்களிலும், www.singer.lk இல் ஆன்லைனிலும் Starlink வன்பொருள் வாங்குவதற்குக் கிடைக்கிறது. நாடு முழுவதும் மேவலதிக கட்டணம் இல்லாமல் விநியோகிக்கப்படுகின்றது. இந்தப் புரட்சிகரமான இணைப்புத் தீர்வை இலங்கை நுகர்வோரின் பரந்த பிரிவுகளுக்கு அணுகக்கூடிய வகையில், நெகிழ்வான கடனட்டை கட்டண விருப்பங்கள் மூலம் கிடைக்கின்றன.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஆலயங்களுக்கு நிதியுதவி

திருகோணமலை, ஓக. 8

திருகோணமலையில் மூன்று ஆலயங்களின் புனருத்தாரணப் பணிகளுக்காகச் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் 4 இலட்சம் ரூபா நிதி நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழங்கப்பட்டது.

திருகோணமலை கிண்ணியா உப்பாறு சித்திவிநாயகர் ஆலய நிர்வாகத்துக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியும், திரியாய் கல்லம்பத்தை தஞ்சை விநாயகர் ஆலயத்தின் புனருத்தாரணப் பணிகளுக்காக 2 இலட்சம் ரூபா நிதியும், பூம்புகார் கிழக்குப் பகுதி பாலையூற்று ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகத்துக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் மற்றும் ஆச்சிரமத் தொண்டர்களால் நேரடியாகச் சென்று வழங்கிவைக்கப்பட்டன. (ச-25,66)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க...

டின் பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்ப டாத விதத்தில் தீர்த்துக்கொள்ளவேண்டிய சவால் எம்முன் இருந்தது. அந்த சவாலை வெற்றிகரமாக எதிர்கொண்டோம். அமெரிக்க தரப்பில் இருந்து யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அவை கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளன. இதுவரையில் இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டு, எந்தவொரு ஒப்பந்தமும் கைச்சாத்திடப் படவில்லை.

எனினும், சில பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்பட்டு சில இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம். இறுதி முடிவு எடுக்கப்பட்டு, ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை. பேச்சுகளின் பயனாக வரிக் குறைப்பு செய்ததற்கு அமெரிக்க தரப்புக்கு நன்றி கூறவேண்டும்.

தீர்வை வரி விவகாரம் தொடர்பில் இலங்கையில் அனைத்து தரப்புகளுடனும் கலந்துரையாடினோம். நாம் தன்னிச்சையாக எவ்வித முடிவையும் எடுக்க வில்லை. 20 சதவீத வரியை மேலும் குறைத்துக்கொள்ளமுடியுமா என்பது பற்றியும் முயற்சித்து வருகின்றோம் - என்றார். (அ-ம-44)

## தலை...

யாழ். பல்கலைக்கழகத்தில் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு 'ராகிங்' சம்பவங்கள் அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்றன. பல்கலைக்கழகத்துக்கும், கோண்டாவிலில் அமைந்துள்ள மாணவர் விடுதிக்கும் இடைப்பட்ட பகுதியிலும் ராகிங் இடம்பெற்றதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்தே, மாணவர் விடுதிகள் மற்றும் தங்குமிடங்களில் உள்ள மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு கோரி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளர் பிரியந்த பிரேமகுமாரவால், யாழ்ப்பாணப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஒரு ராகிங் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவர் ஒருவரின் உறவினர்களிடமிருந்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பாலின மற்றும் பாலியல் சமத்துவ மையத்துக்கு முறைப்பாடொன்று கிடைத்துள்ளது.

கனிஷ்ட மாணவர்களைத் தங்களது வாடகைத் தங்குமிடங்களுக்கு அழைக்கும் சிரேஷ்ட மாணவர்கள், கனிஷ்ட மாணவர்களைத் தாக்கித் துன்புறுத்தும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அறியவருகிறது.

பல்கலைக்கழகத்துக்கும், கோண்டாவிலில் அமைந்துள்ள மாணவர் விடுதிக்கும் இடைப்பட்ட பலாலி வீதிப்பகுதில் தினமும் இரவு 10 மணி முதல் 11 மணிக்கு இடைப்பட்ட நேரத்திலேயே மாணவர்கள் விடுதிகளிலிருந்து வாடகைத் தங்குமிடங்களுக்கு அழைக்கப்பட்டுத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்தால் தாம் பழிவாங்கப்படலாம் என்ற அச்சத்தில் மாணவர்கள் எவரும் முறைப்பாடு செய்ய முன்வருகிறார்கள் இல்லை.

எனவே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும், கோண்டாவில் விடுதிக்கும் இடையிலான பலாலி சாலைப் பகுதியில் மாணவர்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், ராகிங் சம்பவங்கள் தொடர்பாக ஆராயவும், சாத்தியமான தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் தினமும் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணிவரை பொலிஸ் அணிகளை ரோந்துப்பணியில் ஈடுபடுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றோம் - என்றுள்ளது.

அதேநேரம், ராகிங் சம்பவங்கள் தொடர்பாக முறையிடுவதற்கு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பாலின மற்றும் பாலியல் சமத்துவ மையத்தின் 0112123700 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

## குளிக்கச்...

நபர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தேவரையாளி - அல்வாய் வடக்குப் பகுதியைச் சேர்ந்த த. செந்தூரன் (வயது- 37) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தொண்டைமானாறு கடற்கரைப் பகுதியில் குளித்துக் கொண்டிருந்தபோது அந்த இளைஞர் கடலுடன் அடித்துச் செல்லப்பட்டார். சில மணிநேரத் தேடுதலின் பின்னர் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை மரணவிசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் மேற்கொண்டார். (அ-ம-26-20)

## திஸ்ஸ...

விகாரையை அகற்றுமாறு கோரியும், விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதைச் சூழவுள்ள காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் உடனடியாக ஒப்படைக்குமாறும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள். ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் க. சுகாஷ், கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் பொன் மாஸ்டர் மற்றும் கட்சியின் உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, பௌர்ணமி தினமான இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 6.30 மணிவரை இந்தப் போராட்டம் தொடரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## வடக்கிலும்,...

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் சர்வதேச நீதிகோரித் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றோம். 2009ஆம் ஆண்டு மிகப்பெரும் இனவழிப்பின் ஊடாக யுத்தம் முடிவுறுத்தப்பட்டது. முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கு முன்னரும், அதன் பின்னரும், சிறுவர்கள், பெண்கள் உட்படப் பலர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் இனவழிப்பு, செம்மணி மனிதப் புதைகுழி உட்பட பல மனித புதைகுழிகள், சித்திரவதை முகாம்கள் ஆகியவை இனப்படுகொலைக்கான முக்கியமான ஆதாரங்களாக எம் கண்முன் நிலைத்து நிற்கின்றன. இவை அனைத்தும் சர்வதேச விசாரணை ஒன்றின் கீழ் முறையாக விரைந்து விசாரிக்கப்பட வேண்டும். சர்வதேச விசாரணை காலதாமதமின்றி நடத்தப்படவேண்டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர் பெறவேண்டிய உண்மையான நீதியும், அவர்களது பாதுகாப்பையும் உறுதி செய்யும் வகையில் சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகள் இன்றியமையாதவையாகும்.

ஆதலால், செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதிகோரியும், காணாமல் ஆக்கப்பட்டோரின் நிலைமையை வெளிப்படுத்துமாறு கோரியும், உள்ளகப் பொறிமுறைக்குள் தமிழர்களின் பிரச்சினைகளை அடைக்க முற்படும் அரசாங்கத்தைக் கண்டித்தும் எதிர்வரும் 30ஆம் திகதி வடக்கு, கிழக்கில் போராட்டங்களை நடத்தவுள்ளோம்.

பேரணி கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு கல்லடிப் பாலத்திலிருந்து காந்தி பூங்கா வரையும், வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் சங்கிலியன் நினைவிடத்தில் தொடங்கி செம்மணி வரையும் நடைபெறவுள்ளது.

இந்தப் பேரணியில் மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்தினர்கள், மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகமாணவர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், தன்னார்வலர்கள், தொழிலாளர் சங்கங்கள், கிராமிய அமைப்புகள், பொதுமக்கள் அனைவரையும் இணையுமாறு அழைக்கின்றோம் - என்றார். (அ-ம-66-20)

## யானை...

உயிரிழந்துள்ளார். நட்டாங்கண்டல் பிரதேசத்தை சேர்ந்த ச. உதயராசா (வயது- 38) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு பெரியகும்பனை பகுதி ஊடாக மோட்டார்சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது அவரை வீதியில் நின்ற காட்டுயானை தாக்கியுள்ளது. இதன்போது படுகாயமடைந்த குறித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-110)

## புலமைப்பரிசில்...

காக நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 787 பரீட்சை நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. பரீட்சைக்காக சிங்கள மொழி மூலம் 2 இலட்சத்து 31 ஆயிரத்து 638 மாணவர்களும், தமிழ் மொழி மூலம் 76 ஆயிரத்து 313 மாணவர்களும் விண்ணப்பித்துள்ளனர். அதற்மைய இம்முறை 3 இலட்சத்து 7 ஆயிரத்து 959 மாணவர்கள் பரீட்சைக்காக விண்ணப்பித்துள்ளனர்.

மேலதிக வகுப்புகள் அனைத்தும் கடந்த புதன்கிழமை (நேற்றுமுன்தினம்) நள்ளிரவு 12 மணியுடன் தடை செய்யப்பட்டுள்ளன. மாணவர்களை ஒன்றுகூட்டி ஆலோசனைகளை வழங்குவதும் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பரீட்சார்த்திகள் காலை 8.30 மணிக்குப் பரீட்சை மண்டபங்களுக்கு சென்றுவிட வேண்டும். முதலில் இரண்டாம் பகுதி வினாத்தாள் வழங்கப்படும். காலை 9.30 மணிக்குப் பரீட்சை ஆரம்பமாகி 10.45 மணிக்கு நிறைவடையும். அதன் பின்னர் முற்பகல் 11.15 மணிக்கு முதலாம் பகுதி வினாத்தாள் வழங்கப்படும். 12.15 மணிக்கு பகுதி ஒன்று பரீட்சை நிறைவடையும். பரீட்சைக்கு தேவையான உபகரணங்கள் மாத்திரமே மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படும். கைக்கடிகாரத்தை உபயோகிக்கமுடியும். ஆனால் நவீன கைக்கடிகாரங்களை உபயோகிப்பதற்கு அனுமதி இல்லை - என்றார். (அ-ம-இ)

## விபத்தில்...

தில் காயமடைந்த முதியவர் சிகிச்சையின் போது நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா ஜெயரத்தினம் (வயது-74) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சைக்கிளும், மோட்டார்சைக்கிளும் விபத்துக்குள்ளானதில், சைக்கிளில் சென்ற முதியவர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், மேலதிக சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## தமிழர்களுக்குத்...

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள அந்தோனியார்புரம் கிராமத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மத்திய அரசாங்கத்தால் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரப் பகிர்வும், திரும்பப் பெறப்படக்கூடிய அதிகாரங்களும் ஒருபோதும் தமிழர்களுக்குத் தீர்வாக அமையாது என்று போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ-ம-56)

## கொழும்பில்...

முறியடிக்கப்படும்: தோற்கடிக்கப்படும்- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிராமங்களுக்குச் சென்று அரசியல் செய்யுங்கள். மக்களைத் தெளிவுபடுத்துங்கள். ஒன்று திரளுங்கள். இதற்குரிய முழுச் சுதந்திரம், உரிமை அனைவருக்கும் உள்ளது. இதற்கு எவரும் தடை ஏற்படுத்த முடியாது. தடை ஏற்படுத்தவும் போவதில்லை. ஆனால் சூழ்ச்சி செய்ய முற்பட்டாலோ அல்லது தமக்கு எதிராகச் சட்டம் செயற்பட தயாராகும்போது நாட்டில் அராஜக நிலையை தோற்றுவிக்க முற்பட்டாலோ அதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது.

கிரிபத்கொடயில் அண்மையில் ரி56 துப்பாக்கியொன்று கைப்பற்றப்பட்டது. இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துச் செல்கையில், வவுனியாவில் 80 கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டன. இவை கொழும்புக்கு கொண்டுவரவே திட்டமிடப்பட்டிருந்தன. எனவே, இதன் மூலம் என்ன செய்ய முற்படுகின்றீர்கள்? பாதாள குழுக்களை பயன்படுத்தி, தோல்வி கண்ட அணிகள் ஏதேனும் சூழ்ச்சி செய்ய முற்பட்டால், அவற்றைத் தடுப்பதற்கு சட்டம்போதாதெனில் புதிய சட்டங்கள் இயற்றப்படும். இந்தநாட்டை நாம் மீட்க வேண்டும். தோல்வி கண்ட அணிகள் தமது திருட்டை மறைப்பதற்காக சூழ்ச்சிமூலம் நாட்டை பணயமாக பயன்படுத்துவதற்கு இடமளிக்க முடியாது. நாட்டை மீட்பதே எமது இலக்கு. அந்த இலக்கை நோக்கி பயணிப்போம். இதற்கு எதிரணிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக.8
மீசாலை அருள்மிகு பன்றிக் கேணி கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த மாதம் 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிலையில் உற்சவம் 15தினங்கள் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு வசந்த மண்டபப்பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து தேர்த்திருவிழாவும் நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சரவணப்பொய்கை என்ற தீர்த்தக்கேணியில் தீர்த்த உற்சவமும் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்குத் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா சி. சிவரூபன் தெரிவித்துள்ளார். (ச-41-131)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 6 ஆவது தமிழியல் ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம், ஓக.8
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 6ஆவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு "தமிழ்மொழி, இலக்கியச் செழுமையில் ஆழ்வார் பாசுரங்கள்" எனும் கருப்பொருளில் முன்னெடுக்கப்படவுள்ளது. ஆய்வரங்கானது யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவரும் முதுநிலை பேராசிரியருமான கிருஷ்ண பிள்ளை விசாக ரூபன் தலைமையில் கலைப்பீட கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சி.சிறிசற்குணராசா துணைவேந்தர் உரையையும், பேராசிரியர். சி.ரகுராம் கலைப்பீடாதிபதி உரையையும், சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் அரங்க இராமலிங்கன் "ஆழ்வார்களின் அருந்தமிழ்" எனும் பொருளில் திறப்புரையையும் ஆற்றவுள்ளனர். தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் ஈ.குமரன் வரவேற்புரையையும், மாநாட்டின் இணைப்பாளர் சி.செல்வரஞ்சிதம் நன்றியுரையையும் ஆற்றுவார்கள். அத்துடன் தமிழறிவுப் போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்கள் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (ச-25)

## வரலட்சுமி விரத வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஓக.8
கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் வரலட்சுமி விரத வழிபாடுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (ச-25, 17)

*****

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை வரலட்சுமி விரத பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. மாலை 4 மணியளவில் சிறப்பு அபிஷேக வழிபாடுகள் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து மாலை 5 மணியளவில் திருவிளக்குப் பூசை இடம்பெற்று நகுலாம்பிகாதேவி உள்வீதி உலா வரும் திருக்காட்சி இடம்பெறும். இறுதியாக அடியவர்களுக்கு வரலட்சுமிக் காப்பு வழங்கப்படுமென நகுலேஸ்வரர் ஆலய ஆதீன கர்த்தா ரங்கநாதக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ச-66)

*****

மயிலிட்டி வீரமாணிக்கன் தேவன்துறை அருள்மிகு கண்ணகி அம்பாள் ஆலயத்தில் வரலட்சுமி விரத பூசை வழிபாடுகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளன. வழிபாட்டுக்காக வருகைதரும் அடியவர்களின் வசதிக்காக இன்று பி.பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து விசேட பேருந்துச் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-100)

## தமிழியல் ஆய்வு மாநாட்டில் 5 ஆளுமைகள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.8
பல்கலைக்கழகத்தின் 6 ஆவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாட்டில் ஓய்வுநிலைப் பேராசிரியர்களான கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா, கலாநிதி துரை.மனோகரன், வாழ்நாள் பேராசிரியர் ம.இரகுநாதன், மூத்த படைப்பாளர் க.சட்டநாதன், திருவாளர் ச.விநாயகமூர்த்தி ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (ச-25)

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**


பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/58593) J-1

**காணி விற்பகைக்கு**

**யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 22 பரப்பு காணி விற்பனைக்குண்டு**




**நிலப்பரப்பு**

- பிரதான இராச பாதை வீதியில் இருந்து 2 வது காணி 50m தூரத்தில் உள்ளது.
- 20 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்.
- இக் காணியில் இருந்து திருநெல்வேலி, பிரதான சந்தை, கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 km தூரம்.
- நல்லூர் ஆலயம் 2 km தூரம்.
- ஒரு பரப்பின் விலை 69 இலட்சம்.

**தொடர்புகளுக்கு - ஜெயம்**
**077 814 7389**
**077 986 5457**

**பார்வையிடும் நேரம்**
**காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org